DJRD-1-TA

# இயேசு மரணத்திலிருந்து உயிர்த்தாரா? 1

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு உலக பிரசித்திபெற்ற முன்னணி சித்தாந்த நாத்திகரான Dr. ஆண்டனி ப்ளூ மற்றும் ஆக்ஸ்போர்ட் பல்கலைகழகத்தின் முன்னாள் பேராசிரியரும் கிறிஸ்தவ சிந்தாந்தமேதையும் வரலாற்றாலருமான Dr. கேரி ஹேபர்மசுக்கும் இடையிலான விவாதத்தை பார்க்கும்படி உங்களை வரவேற்கிறோம், இவர் தற்போது லிபர்டி பல்கலைகழகத்தில் சித்தாந்தத்தின் பிரிவினுடைய தலைவராக இருக்கிறார், இன்றைய தலைப்பு, "இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா?"

**Dr. ஆண்டனி பிழூ** என்னை போன்றவர்கள் சில அற்புதங்கள் நடந்திருக்குமா என்பதை ஏற்றுகொள்வது கடினமாகும், இதுல ஏதோ தவறு நடந்திருக்குது என்றுதான் யோசிக்க தோணுது. ஒரு அற்புதம் நடந்திருக்கலாம் என்று நா சொன்னாலும், என்னை பொறுத்தவரை அது வெளிப்படையாக தெரியனுன்னு நா எதிர்பார்க்கிறேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ரொம்ப முக்கியமான காரியம் இதுதான் அதாவது சீஷர்கள் அவங்க உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசித்தது போன்றதான அனுபவங்களை பெற்றிருந்ததை நண்பினார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சீஷர்களுக்கு உண்டான அனுபவத்தின் மூலம் அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் தரிசித்ததாக விசுவாசித்தார்கள்." சரி, இருந்தாலும், நீங்க அதை சரீர பிரகாரமானது என்கிறீர்கள். அதற்கான விளக்கத்தை சொல்லுங்கள், அது எபப்டி நடந்தது? அதாவது, ஏதோவொன்று நடந்திருக்கிறது, அதைப்பற்றி எல்லாரும் என்ன சொல்லுகிறார்கள்.

**Dr. ஆண்டனி பிழூ** இதை எல்லாத்தையும் நான் துக்கத்தோடு தொடர்புடைய தரிசனங்களாக பார்க்கிறேன் மற்றவர்கள் இதை பார்த்திருப்பார்கள் என்று சொல்வதற்கு அங்க ஒன்றுமில்லை.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** டோனி தன்னை தானே ரொம்ப வருத்திக்கிறாருன்னு எனக்கு தோணுது. முதலாவதாக, காலியான கல்லறை இந்த கல்லறையை வைத்து அவரால எதையுமே சாதிக்க முடியல. இரண்டாவதாக, சீஷர்களுக்கு உண்டான மன பிரம்மை என்றார் ஆனா நா ஏற்கனவே சொன்னது போல அது சாத்தியமல்ல என்பதற்கு பல காரணங்கள் இருக்குது: மக்கள் குழுவிற்கு மன பிரம்மை உண்டாகாது; அவங்க எல்லாரும் ஒரே மன நிலையில் இல்லை. பலதரப்பட்ட கால நேரம், இடங்கள், மக்கள், பாலினம், வித்தியாசமான வேலைகளை செய்து கொண்டு இருந்தனர். காலியான கல்லறை, அது வாழ்க்கையை மாற்றவில்லை, யாக்போபு, பவுல். நிறைய காரணங்களிருக்கு.

**Dr. ஆண்டனி பிழூ** இல்ல. நா என்ன கேட்க விரும்புகிறேன் என்றால் உண்மையா பவுல் என்னத்தை பார்த்தார். தான் கண்டது உயிர்த்தெழுந்த கிறிஸ்துதான் என்று எதை வைத்து சொல்லுகிறார். ஆனா அவன் அங்கு எப்படி அதை பார்த்தான் ஏன் அவனோடு இருந்தவர்களாக உயிர்த்தெழுந்த இயேசுவை அப்ப பார்க்க முடியல வேறு ஏதும் நடக்கலையே.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை பார்த்ததாக நினைக்கிறார்கள் என்பதை எல்லா விமர்சகர்களும் ஏற்றுகொள்ளுகிறார்கள். இது என்ன பிரச்சனை. சீஷர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் பார்த்தார்கள் என்றால், மன பிரம்மைக்கு அங்க இடமில்லை, அந்த மாதிரி ஒன்று நடக்க அங்க வாய்ப்பு இல்லை. இது ஒரு மறுக்க முடியாத நிகழ்வு என்று எல்லாருக்கும் தெரியும்.

**அறிவிப்பாளர்:** கிறிஸ்துவம் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலில் தான் நிலை நிற்கிறது. கிறிஸ்து மரணத்தில் இருந்து உயிர்த்திருந்தால், கிறிஸ்தவம் உண்மையானதாக இருக்கும். அப்படி இல்லாவிட்டார், கிறிஸ்தவம் பொய்யாக இருக்கும். அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார், கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், உங்கள் விசுவாசம் விருதாவாய் இருக்கும், உங்கள் பிரசங்கமும் வீணாயிருக்கும், நீங்க உங்கள் பாவங்களிலேயே தரித்திருப்பீர்கள்.

***

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** வணக்கம்! இந்த நிகழ்ச்சியில் உங்களை பார்ப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்றைய விருந்தினர்களை அறிமுகம் செய்கிறேன் இரண்டு உலகத்தரம் வாய்ந்த சித்தாந்த மேதைகள் இவர்கள் ஒரு முக்கியமான கேள்வியை விவாதிக்க இருக்கிறார்கள், இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? முதலாவது பகுதியில், இவர்களை பற்றி ஒரு சில தகவல்களை கொடுக்க விரும்புகிறேன் அதினால் இவர்கள் யார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள். எனது முதல் விருந்தினர் Dr. ஆண்டனி பிளூ, இவர் உலகின் பிரசித்திபெற்ற சித்தாந்த நாத்திகர். இவர் இங்கிலார்ந்து யுனிவர்சிடி ஆப் ரீடிங்கில் தலைமை பேராசிரியராக இருக்கிறார். மேலும் இவர் சித்தாந்தத்தில் நிரந்தர பேராசிரியர் என்ற பதவியை யுனிவர்சிடி ஆப் கீலில் கொண்டிருக்கிறார், கிங்க்ஸ் கல்லூரி, யுனிவர்சிடி ஆப் அபெர்டீன்ல் ஆக்ஸ்போர்ட் யுனிவர்சிட்டி கிரைஸ்ட் சர்ச், மேலும் உலகமெங்கிலும் கிட்டத்தட்ட 12 பல்கலைகழகங்களில் சிறப்பு பேராசிரியராகவும் இருந்து வருகிறார். இவர் M. A பட்டத்தை செயின்ட் ஜான்ஸ் கல்லூரியில் பெற்றார், யுனிவர்சிட்டி ஆப் ஆக்ஸ்போர்ட், மேலும் கீலி பல்கலைகழகத்தில் இலக்கிய டாக்டர் பட்டம் பெற்றிருக்கிறார். இவர் சுமார் 23 புத்தகங்களை எழுதியிருக்கிறார், 12 புத்தகங்களை தொகுத்து வழங்கியிருக்கிறார், மேலும் 72ற்கும் மேற்பட்ட கட்டுரைகளை பிரசித்திபெற்ற நாளிதழ்களில் எழுதியிருக்கிறார். இதெல்லாம் என்னுடைய கணக்குக்கு உட்பட்டவையாக இருக்கிறது. சித்தாந்தத்தின் என்சைக்ளோபீடியாவை பார்ப்பீர்கள் என்றால், அற்புதங்கள் பற்றிய கட்டுரைகள் அனைத்தையும் Dr. ப்ளூ தான் எழுதியிருக்கிறார், ஏனென்றால் எப்படி பார்த்தாலும் இவர் உலகத்தில் இப்போது இருக்கிற ஹயூமின் மேதையாக இருக்கிறார்.

எனது இரண்டாவது விருந்தினர் Dr. கேரி ஹேபர்மாஸ். இவர் லிபர்டி பல்கலைகழகத்தின் சித்தாந்தம் மற்றும் இறையியல் பிரிவின் முதல்வராக இருக்கிறார் லின்ச்பார்க், விர்ஜினியாவில். கேரி டாக்டர் ஆப் டிவிநிடியை இம்மானுவேல் கல்லூரியில் பெற்றார், ஆக்ஸ்போர்ட், இங்கிலாந்து. மேலும் Ph.D. யை மிகிகன் மாநில பல்கலைகழகத்தில் முடித்தார். இவர் உக புத்தகங்களை எழுதியிருக்கிறார், மேலும் 110ற்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதி வெளியிட்டிருக்கிறார். ஜென்டில்மேன், நீங்க இங்க இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நமக்கு ஒரு சிறப்பான உரையாடல் காத்திருக்கிறதென்று நம்புகிறேன்.

Dr. ஹேபர்மஸ், எனக்கு தெரியும் இன்றைக்கு நிகழ்ச்சியை பார்த்துகொண்டு இருப்பவர்களோட, நாம் இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா என்பதை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறோம், ஒருவேளை அவர் கேட்கலாம், “கம் ஆன்! அதாவது, நீங்க ஆதாரம் இருக்குன்னு சொல்றீங்க, வரலாற்றில் அதை பார்க்க முடியுமா?” நீங்க பத்திரிக்கைகளை  பார்க்கும்போது  நியூஸ் வீக் அப்பறம் டைம் இதெல்லாம் ஆறுமாதம் எட்டு மாதத்திற்கு ஒருமுறை வெளிவருகிறது, இதோட இன்னொன்றும் இருக்குது, :இயேசுவின் தரிசனங்கள்.” இந்த பத்திரிக்கைகளில்  பலவிதாமான காரியங்கள் வருகிறது, ஆனா அவங்க  தொடர்ந்து சொல்லுகிற ஒரே விஷயம், “இதற்கான சில ஆதாரங்கள் இருக்கிறது.” சரி, நீங்க கடந்து வந்த பாதைகளில் ஒரு புத்தகத்தையும் எழுதியிருக்கிறீர்கள் தி ஹிஸ்டாரிகல் ஜீசஸ், அதுல நீங்க மிசிகன் மாநிலத்தில் உங்களோடு Ph. D க்காக தயாராகும்போது கண்டறிந்த உண்மைகளை எழுதியிருக்கிறீர்கள். நீங்களே இறை நம்பிக்கை இல்லாம இருந்தவர். உண்மை என்னன்னா, இந்த ஆன்மைகள் தான் உங்களை இயேசுவை நம்பும்படி செய்தது. இன்றைய விமர்சகர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட 12 வரலாற்று உண்மைகள் இருக்கிறது என்று அதில் குறிப்பிட்டு சொல்லியிருக்கீங்க. அது என்னன்றத இன்றைக்கு பார்க்கும்படியாக விரும்புகிறேன். இப்ப இதுலிருந்து துவங்கிடலாமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்**  சரி, ஜான், அதுல  முக்கியமானத குறிப்பிட்டு சொல்றேன். பொதுவா  இன்றைக்கு எல்லாருமே சிலுவை மரணத்தினால்தான் இயேசு மரித்தாருன்னு சொல்றாங்க. அதாவது, ஜான் கிரோசன் மற்றும் ஜீசஸ் செமினரியில் இருக்கிறவங்க பண்டைய காரங்களில் இதுதான் பொதுவாக அறியப்பட்ட உண்மையாக இருந்தது என்கிறார்கள். அவர் அடக்கம்பண்ணப்பட்டார். அதுமட்டுமில்ல, இந்த காரியம் சீஷர்களுக்குள்ள ஒரு திகிலை உண்டாக்குவதாக அமைந்திருந்தது. இப்ப, காலியான கல்லறை என்ற உண்மையை பல மேதைகள் ஒப்புகொள்ளுகிறார்கள் இருந்தாலும் பட்டியலில் உள்ளவைகளோடு இதையும் நம்பாதவர்களும் இருக்காங்க. இதுல ரொம்ப முக்கியமானது என்னன்னா சீஷர்கள் தாங்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தரிசிக்கும்படியான அனுபவத்தை பெற்றதாக நம்புகிறார்கள். அதின் விளைவாக அவர்கள் மாறிவிட்டார்கள். உயிர்த்தெழுதல் தான் அவங்க பிரசங்கத்தின் மையமாக இருந்தது. அவங்க எருசலேமில் பிரசங்கித்தார்கள். சபை பிறந்தது. தனி நபர்களின் சாட்சியும் இருக்குது யாக்கோபு மற்றும் பவுல், இறை நம்பிக்கையில்லாத இருவர் – ஒருத்தர் குடும்ப நபர், இன்னொருத்தர் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தி கொண்டிருந்தவர் – இவர்களும்

தாங்கள் கண்டது உயிர்த்தெழுந்த இயேசுதான் என்று அனுபவ ரீதியான ஒன்றாக இருந்தது.

அது மட்டுமில்ல, இன்றைக்கு வரலாற்று இயேசு அமைப்பினர் என்னுடைய வலது பக்கத்தில் இருப்பவரையும் சேர்த்து பல மேதைகள் இதை தங்களுடைய ஆவணங்களுக்கு ஒரு அடித்தளமானதாக வைத்துதான் உண்மைகளை பற்றிய பட்டியலை துவங்குகிறார்கள்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, டோனி, ஹேபர்மாசின் கருத்துக்களை பற்றிய என்ன நினைகிறீங்க?

**Dr. ஆண்டனி பிழு** சரி, இந்த உண்மைகளை நான் மறுக்கல இருந்தாலும் ஒன்று மட்டும் சொல்கிறேன், சரி, இதனுடைய ஆதாரங்களின் சூழ்நிலைகள் பல விதங்களில் திருப்தி அளிக்காதது போலதான் தோன்றுகிறது. உதாரணமாக, சிலுவையில் அறையப்படுதலும் அதற்கு பிறகு நடந்த சம்பவங்களும் எந்த ஆண்டு நடந்தது என்று இதுவரைக்கும் யாராலையும் தீர்க்கமா சொல்ல முடியல. இன்னொரு மறுக்க முடியாத உண்மை பிறப்பின் தேதியும் இதுவரை யாருக்கும் தெரியாது... சரி, இன்னும் பல முக்கியமான பிரபலங்களுடைய பிறந்த தேதிகள் தெரியாது என்பது உண்மைதான். இன்னொரு காரியமும் இருக்கு, எல்லா ஆதாரங்களும் விசுவாசிகளான கிறிஸ்தவர்கள் எழுதிய ஆவணங்களை சார்ந்திருக்கிறது, அவங்கள்ள யாருமே கண்ணார கண்ட சாட்சிகள் இல்லை, எருசலேமில் மீதமிருந்தவர்கள் ஏன் மனமாரவில்லை உண்மையாகவே பூமி அதிர்வுகள் உண்டானது மற்ற அற்புதங்கள் அங்கு நடந்ததா இல்லையான்னு சொல்வதற்கு அவர்களில் மீதியானவர்கள் யாருமே இல்லை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** இதை பற்றி உங்க கருத்து என்ன, கேரி?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, இப்ப, ஆதி கால கிறிஸ்தவர்கள் யாருமே கண்ணார கண்ட சாட்சிகள் இல்லைன்னு, நீங்க சொல்லும்போது அதுல பவுல சேர்க்கலன்னு நினைக்கிறேன், சரியா?

**Dr. ஆண்டனி பிழு** ஓ, நிச்சயமா, ஆமா. நா சுவிசேஷங்களை எழுதியவர்களைதான் சொன்னேன்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி. ஆனா பவுலை பார்க்கும்போது அவரே உறுதியான சாட்சியா இருக்காரே.

**Dr. ஆண்டனி பிழு** நிச்சயமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** உறுதியான பவுலின் புத்தகங்களை நம்மால் விரல்விட்டு சொல்ல முடியுமே.

**Dr. ஆண்டனி பிழு** ஆ, ஆமா. ஆனா அவர் எருசலேமில் இல்லையே, அதாவது, அந்த நேரத்தில் இல்ல.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஆமா, ஆனா கொஞ்ச நாட்களிலேலே, அதாவது, ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்படும்போது அங்க இருந்தார். ஆனா வேதாகமத்திற்கு வெளியில் உள்ள ஆவணகளை நா ஏற்றுகொள்ள மாட்டேன். நிறைய விஷயங்களில்

வேதாகமத்திற்கு புறம்பான ஆவணங்கள் இருக்குன்னு எனக்கு தெரியும். நா சொன்ன இந்த ஆதாரங்களின் பட்டியலில் உள்ள எல்லாமே, சீஷர்களுக்கு ஏற்பட்ட அச்சத்தை தவிர எல்லாமே, அது மனோரீதியாக சரியானது என்றிடலாம், மற்ற அனைத்தும் பவுல் ஒருவேளால மட்டுமே நிரூபிக்க முடிந்த உண்மைகளாக இருக்கிறது. ஆனா அதில் பெரும்பாலானவை வேதாகமத்திற்கு புறம்பான இலக்கியங்களினாலும் ஆதரிக்கப்படுகிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், ஒரு உதாரணம் சொல்லுங்கள். அந்த ஆவணங்களை பற்றி சொல்ல முடியுமா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, 1 கொரிந்தியர் 15, எந்த கேள்வியும், தேவையில்லை இதுதான் ஆதாரங்களின் மைய பகுதியாக இருக்கிறது. இது எந்த பக்கம் இருந்து பார்த்தாலும் பொருந்துவதாக இருக்குது. அதாவது, ஒரு சிறந்த மேதை ஒருமுறை சொன்னது என் நினைவிற்கு வருகிறது, டோனிக்கு அடுத்து அவர்தான் அப்படி சொன்னார், அதாவது, “ஹேபர்மசுக்கு உயிர்த்தெழுதலை பற்றி ஆதாரமாக காட்ட 1 கொரிந்தியர் 15 தான் இருக்கிறது என்றார்.” இப்படி சொல்லி உயிர்த்தெழுதலை வேறு பிரிக்க முடியாதுன்னு எனக்கு தோணுது, ஏன்னா 1 கொரிந்தியர் 15 மறுக்க முடியாத ஆதாரம், பவுலினால் எழுதப்பட்டது, முந்தைய காலத்தில், கிபி 55- 57க் கிடையில். ரொம்ப முக்கியமானது என்னன்னா, 1 கொரிந்தியர் 15 வசனம் 3ல், பவுல் சொல்லுகிறார் இதை அவர்கள் மற்றவர்கள் மூலமாக பெற்றுக்கொண்டதாக கூறுகிறார். இங்கு சொல்லப்படும் காரியங்கள்... வேறுவிதமா சொன்னா, இதை எல்லா, “வழக்கங்கப்பட்டதும் பெற்றுக்கொண்டதுமானவை” இதெல்லாம் பாரம்பரியத்தை கடத்துவது என்பதற்கான வேறு பதங்களாகும். இதை எல்லாத்தையும் ஒன்று சேர்த்தால், இந்த எல்லா செய்திகளையும் பவுல் எருசலேமில் இருந்த பேதுரு மற்றும் யாக்கோபின் மூலமாக பெற்றுகொண்டார் என்று புரியும். அது மட்டுமல்ல, பவுல் தானே கூறியிருக்கும் கலாத்தியர் 1:18ல் இருந்து அவர் பயன்படுத்திய வார்த்தைகள் மூலம் இவர் பலவித ஆராய்சிகள் செய்து கண்டறிந்தார் என்பது புரிகிறது, அந்த பகுதிக்கு முன்னும் பின்னும் சொல்லபப்ட்டிருக்கும் காரியங்கள் சுவிசேஷத்தின் தன்மையை குறிக்கிறது. அதனால பவுல் சிலுவை நிகழ்விற்கு பிறகு ஒன்று அல்லது ஒன்றரை ஆண்டுகளில் மனதிரும்பி இருக்கணும். இதைதான் விமர்சகர்கள் பயன்படுத்துகிறார்கள். மூன்று வருடங்களுக்கு பிறகு அவர் எருசலேமிற்கு போகிறார். அப்படி பார்த்தா அது கிபி 35. சிலுவை நிகழ்விற்கு கிபி 30 என்று வைத்துகொண்டால், கிபி 35ல், ஐந்து வருடங்கள் கழித்து பேதுரு மற்றும் யாக்கோபிடமிருந்து இதை பெற்றுகொள்ளுகிறார். பண்டைய வரலாறு கூறுவது போல, இது தான் ஆரம்பத்தில், இருந்த நிலையாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பேதுரு பவுலுக்கு எந்த முக்கியமான காரியத்தை சொன்னதாக பவுல் பதிவு செய்து வைத்திருக்கிறார்?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அப்ப, பேதுரு மற்றும் யாக்கோபிடமிருந்துதான் பவுல் 1 கொரிந்தியர் 15 சொல்லிய அந்த பட்டியலை பெற்றிருந்தார் என புரிகிறது. அதுமட்டுமல்லா, பவுலை தவிர, பேதுருவையும் யாக்கோபையும் இரண்டு சாட்சிகள் என்று பவுல் 1 கொரிந்தியர் 15ள் சொல்லும் பட்டியலில் பெயரிட பட்டிருக்கிறார்கள்,

அதனால இது திடமான ஐக்கியத்தை குறிக்கிறது. ஆதிகால வரலாற்றை பார்க்கும்போது, ஜெர்மன் வரலாற்று நிபுணரை நினைத்து பார்க்கிறேன், ஹான்ஸ் வான் கேம்பென் ஹவுசன், சொல்லுகிறார் 1 கொரிந்தியர் 15:3 ஆதிகால எழுத்துக்களோடு பொருந்தக்கூடிய அனைத்து வரலாற்று சாராம்சங்களும் உபகரண தரங்களையும் ஈடு செய்யும் தன்மை இதற்கு இருக்கிறது என்கிறார். அவர் மிக அழகாக சொல்லியிருக்கிறார் என்று நம்புகிறேன், அதனால, அதாவது, டோனி பவுல் சொல்வதை நம்ப மாட்டார் என்று எனக்கு தெரியும், ஆனா நம்மிடம் இந்த ஆதிகால ஆவணங்கள் இருக்கிறதென்று சொல்லுகிறேன் இதெலாம் ரொம்ப ரொம்ப முக்கியனாதுன்னு நா நினைக்கிறன்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** டோனி, இந்த சாட்சிகளை தொடர்ந்து பவுலும் சேர்ந்து கொள்வதை குறித்த உங்க கருத்து என்ன?

**Dr. ஆண்டனி பிழு** ஓ, அவன் சிலரோடு இருந்தபோது அவனுக்கு ஏதோ நடந்தது என்று அவன் சொலுகிற விஷயத்தில் எனக்கு கொஞ்சம் கூட சந்தேகமே இல்லை. ஆனா அவனுக்கு தொடர்புடைய ஒன்று நடந்ததாக சொல்லுகிறான்... அவன் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை கண்டதாக கூறுகிறான். ஆனா அவனோடு கூட இருந்தவங்க எதையுமே பார்க்கலையே, அப்படித்தான? அவங்க அந்த சத்தத்தை கேட்டாங்களான்னு சந்தேகமா இருக்கு.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** முதலாவதாக, பவுலோடு கூட இருந்தவர்கள், அவன் பார்த்த அதே காரியத்தை பார்க்கவில்லை என்று சொல்லுகிற காரியத்தை அப்போஸ்தலர் நடபடிகளில் தான் இருக்கிறது, அதை பவுல் சொல்லவே இல்லையே. அப்ப, நாம அப்போஸ்தல நடபடிகளில் இருக்கிறதை ஒப்புகொள்வோம் என்றால் அந்த நிருபத்தில் உள்ள பலவிஷயங்களை நாம ஆதாரமாக எடுத்து கொள்ள முடியும் என்பது என்னோட கருத்து. ஆனா என்ன சொல்ல வர்ரேன்னா, உங்க கருத்த நாம் ஏற்றுகொள்ளமறுக்கிறேன். பவுல் இயேசு தத்ரூபமாக தனக்கு காட்சியளித்தார் என்று நம்புகிறான் வேணுன்னா அதை பவுலினுடைய நிருபங்களில் இருந்தே சந்தோஷமா என்னால எடுத்து காட்டவும் முடியும்

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட். இப்போது ஒரு சிறு இடைவேளை எடுத்துகொள்வோம் சிறிது நேரத்தில் சந்திக்கலாம். நாம் விவாதிக்கும் தலைப்பு, :இயேசு மரணத்தில் இருந்து உயிர்த்தாரா? இப்போது அப்போஸ்தலனாகிய பவுலை குறித்து பார்த்துகொண்டு இருக்கிறோம், எப்படிப்பட்ட உயிர்த்தெழுதல் சம்பவித்தது என்ற தகவலை யாக்கோபு பேதுருவிடம் இருந்து அறிந்துகொள்கிறார். அது ஆவிக்குரியதா? சரீரபிரகாரமான ஒன்றுதானா? அல்லது அது ஒரு பிரம்மையா? இல்லாவிட்டால் வேறு ஏதாவதா? அதை பற்றி இடைவேளைக்கு பிறகு நாம் பார்க்க இருக்கிறோம்.

****

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக, இரண்டு அற்புதமான விருந்தினர்களோடு பேசிக்கொண்டு இருக்கிறோம்: Dr. ஆண்டனி ப்ளூ, உலக பிரசித்தி பெற்ற சித்தாந்த நாத்திகர் என்று அறியபடுகிறவர், மற்றும் Dr. கேரி ஹேபர்மாஸ், இவர் கிறிஸ்தவ சிந்தாந்தம் மற்றும் வரலாற்றாளர், இயேசுவின் உயிர்த்தெழுதலின் ஆதாரங்களை நிருபித்து காட்டுவதில் உலக பிரசித்தி பற்ற நபராக அறியப்படுகிறவர்.

சரி, இப்ப ஏன் இந்த 12 உண்மைகளை மையப்படுத்துவது அவசியமாக இருக்கிறது விமர்சகர்கள் இதை ஒப்புகொள்ளுகிறார்கள், இவங்க எல்லாரும் சுவிசேஷகர்கள் கிடையாது, பொதுவாக இருக்கும் விமர்சக வல்லுனர்களை பற்றிதான் சொல்லுகிறோம். இதை பற்றி பார்க்கலாம். முதலாவதாக, இதை அவர்கள் ஏன் ஏற்றுகொள்ளுகிறார்கள்?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** அதை, ஏற்றுகொண்டாங்கன்னு தான் நினைக்கிறன் ஏன்னா அதற்கு நல்ல ஆதாரம் இருக்குது. இன்றைக்கு பவுலை ஏற்றுகொள்ளுகிறார்கள், டோனியும் அதைதான் சொன்னார். இந்த பட்டியலில் உள்ள அனைத்தையும் பவுலிடமிருந்தே பார்க்க முடியும். எல்லாருடைய கருத்து என்னன்னா சுவிசேஷங்கள் அப்போஸ்தல நடபடிகளில் இருந்து அங்குமிங்குமாக சிலவற்றை சேர்த்துகொள்ளாம் என்பதே.அதனால இது நல்ல ஆதாரமா இருக்குன்னு நினைக்கிறேன். இப்ப, இந்த பன்னிரண்டு எதற்காக? இது என்னுடைய தனிப்பட்ட கருத்தை இந்த ஹிஸ்டாரிகல் ஜீசஸ்ல நா எழுதியிருக்கிறேன். மற்றவர்கள் இதற்கும் மேல நிறைய சொல்லலாம், குறைவாகவும் இருக்கலாம்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஜனங்க இதை பற்றிய கேள்வி கேட்டா, கேரி, உங்க புத்தகத்தில் இருந்து புரிந்துகொண்டது என்னன்னா, இந்த பண்ணிரண்டுமே, தன்னை ஆதரிக்கும் பல டன் கணக்கான ஆதாரங்களை வரலாற்றில் கொண்டிருக்கிறது. அதையும் நம்மால பார்க்க முடியும் இல்லையா.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** ஏதாவது ஒன்றை மட்டும் பார்க்க முடியும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி, டோனி, இந்த 12 உண்மைகளையும் வல்லுநர்கள் ஏற்றுகொள்கிறார்கள் என்பதை ஒப்புகொள்கிறீர்களா.

**Dr. ஆண்டனி பிழு** ஆமா.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், இப்ப, கேள்வி இதுதான், இந்த உண்மைகள் இருக்கிறது, இப்ப இதிலிருந்து எப்படிப்பட்ட முடிவை நாம் பெற்றுகொல்கிறோம்? டோனி, இதிலிருந்து நீங்க என்ன நினைகிறீங்க?

**Dr. ஆண்டனி பிழு** இந்த ஒன்றிலிருந்து, பவுலை விட்டுடலாம், இதுல எனக்கு பெரிய ஆர்வம் ஏதும் இல்லை, இல்ல.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** அப்படின்னா, அந்த உண்மைகளில் ஒன்று, சரியா சொல்றேன்னு நினைக்கிறேன்: “சீஷர்களுக்கு உண்டான அனுபவத்தின் மூலம் அவர்கள் உயிர்த்தெழுந்த இயேசுவை தான் தரிசித்ததாக விசுவாசித்தார்கள்.” சரி, இருந்தாலும், நீங்க அதை சரீர பிரகாரமானது என்கிறீர்கள். அதற்கான விளக்கத்தை சொல்லுங்கள், அது எபப்டி நடந்தது? அதாவது, ஏதோவொன்று நடந்திருக்கிறது, அதைப்பற்றி எல்லாரும் என்ன சொல்லுகிறார்கள்.

**Dr. ஆண்டனி பிழு** ஓ, ஆமா. என்னுடைய கருத்து என்னன்னா இதெல்லாம் துக்கத்தோடு தொடர்புடைய தரிசனங்கள். அதாவாது, இதோ பொதுவான ஒன்றுதான். தனது கணவரை இழந்தவர்கள், மனைவி, அலது நெருக்கமானவர்களை இழந்தவர்கள் அழுத்தத்தில் இருக்கும்போது அவங்களுக்கு பழக்கமான அந்த நபர் அவங்க பக்கத்துல

இருக்க மாதிரி பேசற மாதிரி வீட்டுக்குள்ள எங்கையோ இருக்கிற மாதிரியான பிரம்மைகள் உண்டாகும். இதையெல்லாம் துக்கத்தோடு தொடர்புடைய காட்சிகளாக எடுத்துகொள்வேன் அதோடு இதை வேறு நபர்கள் பார்த்ததாக சொல்லப்படவே இல்லை என்பதையும் கவனிக்கணும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நீங்க ஜாக் கேண்டினுடைய புத்தகத்திற்கு தொகுப்பு எழுதினீர்கள் இல்லையா தி பிலாசபிகல் ஆரிஜின்ஸ் ஆப் த ரிசரக்ஷன் மித், சிரியா? அதுல, அதாவது, அது பிரீ என்குவைரி நாளிதழ் மற்றும் இன்னும் ஒரு சில நாளிதல்கள்ள வெளிவந்தது என்று நினைக்கிறேன்.

**Dr. ஆண்டனி பிழு** ஆமா.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதாவது அதுல, இந்த சீஷர்களுக்கு உண்டான அனுபவத்தில் இரண்டு கோணங்கள் இருப்பதாக சொல்லியிருந்தார்: சீஷர்களுக்கு உண்டான மன பிரம்மை மற்றும் பவுலுக்கு ஏற்பட்ட மனம் சார்ந்த பிரச்சனை . இதை பற்றி சொல்ல விரும்புறீங்களா?

**Dr. ஆண்டனி பிழு** சரி, இந்த கன்வர்ஷன் சைகாசிஸ் பத்தி எனக்கு தேராது, ஆனா இதெல்லாம் வில்லியம்ஜேம்ஸ் தனது பலதரப்பட்ட்ட மதங்களின் அனுபவங்கள் என்ற புத்தகத்தில் தெளிவாக எழுதி இருப்பது போலதான் இருக்கிறது. இந்த வெளிப்படையான மத மாற்றங்களில் என்னதான் நடக்கிறது? பல ஜனங்களுடைய மன மாற்றங்கள் எல்லாம் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு நிதானமாக மாறிடுவாங்க. ஆனா இன்னும் பல இடங்களில் பார்க்கும்போது, அதில் பெரும்பாலானவைகளை வில்லியம் ஜேம்ஸ் மூலம் அறிந்துகொள்ளல முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** இப்ப, இது ஏன் முக்கியமானது என்பதை புரிய வைக்கிறேன். பதினைந்து ஆண்டுவலுக்கு முன்பு இரண்டு பேர் அருமையாக விவாதித்தார்கள். இப்ப, நம்மில் பலர் அதை தவறிவிட்டோம். அதை ஒரு புத்தகத்தில் நாம் வாசித்தேன், அது மிக அருமையான விவாதம். ஆனா ஜாக் கென்ட், அவர் நீங்க தொகுப்பு எழுதிய அந்த நபர் சொல்லுகிறார், “ஹேபர்மாசால் அளிக்கப்பட ஒரு டசன் உண்மைகளும் மிக அருமையானவைகள். பிரச்சனை என்னவென்றால், ப்ளூவிடம் அந்த உண்மைகளை விளக்கி சொல்லும் சூத்திரம் ஆதாரம் இல்லாததால் விவாதத்தில் தோற்றுவிட்டார் என்று கூறியிருந்தார்.” இப்ப, சொல்லுங்க இதைதான் நீங்க முன்வைக்க விரும்பினீர்களா?

**Dr. ஆண்டனி பிழு** ஆமா. இதைதான் கடந்த 15 ஆண்டுகளில் நான் கத்துக்கிட்ட விஷயமா பார்க்கிறேன். இதை தவிர நிறைய விஷயங்களையும் கற்றுகொண்டேன், ஆனா இதுதான் ரொம்ப தெளிவான ஒன்றாகும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், சரி, கேரி, உண்மையில், “மன பிரம்மை” என்ற விஷயம் பல நாட்களாய் இருக்கிறது ஆனா இது ஒரு குறிப்பிட்ட விதமான மன பிரம்மை என்று சொல்லபப்டுகிறது. சீஷர்களுக்கு எண்டான வருத்தத்தால் ஏற்பட்ட மனபிரம்மை என்கிறார்கள். அது என்னவென்று கொஞ்சம் விளக்கமா சொல்லுங்க. அப்போஸ்தலர் பவுலின் மனமாற்றத்திற்கு உண்டான மனோவியாதி. இது பொருந்துமா?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** இது ரொம்ப நெருக்கமா இல்லைன்னு நினைக்கிறேன். இதை தலைகீழாக சொல்லி கட்டுகிறேன். பவுலிடத்திலிருந்து பார்க்கலாம். இந்த புத்தகத்தில் ஜாக் கென்ட் சொல்லுகிறார் பவுலுக்கு மனம் சார்ந்த பிரச்சனைகள் இருந்துச்சாம், அவர்தான் சொல்றாரு. ஏன் அதை அவர் உங்ககிட்ட சொல்லல, அதாவது, இது ரொம்ப சுலபமா சொல்லகூடியது ஏன்னா நிறைய பேருக்கும் மன கோளாறு பற்றி ஒன்றுமே தெரியாது, அவர் DSM3 என்கிறார் அதாவது மனோவியாதியை கண்டறியக்கூடிய நிலையான ஒரு கருவி.

தமஸ்குவுக்கு போகிற வழியில் பவுலுக்கு இந்த மன கோளாறு ஏற்பட்டிருந்தால், இதுல பல பிரச்சனைகளை நாம சந்திக்க வேண்டியிருக்கும். அவர் அப்படி எதையும் சொல்லல, முதலாவதாக, எந்த இலக்கியங்களிலும் மன பிரம்மை பற்றி சொல்லப்படவில்லை. எளிமையா சொன்னா இது சக்திவாய்ந்ததும் உடனடி மாற்றத்தை கொடுப்பதாகவும் இருந்தது. கொஞ்ச நேரத்திற்கு தான், உடனே மறைந்திடும். அப்ப, மன கோளாறு இருந்தா இப்படி நடக்காது. இதை ஏத்துக்க முடியாது. இது மன கோளாறுதான் உண்டாயிருக்கும் என்று சொன்னால், இந்த கெண்டோட புத்தகத்தின் படி எடுத்துகிட்டா, அதோடு ஒரு சத்தம் கேட்கும் பிரம்மையும் நடந்திருக்கணும் (சத்தம் கேட்டது போல) அப்பறம் ஒரு தரிசனமான பிரம்மையும் உண்டாயிருக்கணும் (பார்ப்பது) இறுதியா, பவுலுக்கு மிகப்பெரிய மன வியாதி இருந்திருக்கணும், அதாவது அதைதான் மேசியா காம்ப்ளக்ஸ்னு சொல்வாங்க, ஏன்னா அதுக்கு அப்பறம் பவுல் போய், :தேவன் என்னிடம் பேசினார் உங்களுக்கு இதை சொல்லும்படி சொன்னார் என்கிறார்." அப்ப, நான்கு காரியங்கள் ஒரே நேரத்தில் சம்பவிக்கணும்: மன கோளாறு, 2 விதமான பிரம்மைகள் தோன்றனும், அப்பறம் மேசியா காம்ப்ளக்ஸ் அவனுக்கு உண்டாகணும் ஒரே நேரத்துல அப்படி நடந்தா ஒரே நேரத்துல எல்லாம் முடிஞ்சிரும் வேற எதையுமே நம்மால பாக்க முடியாது.

இன்னொரு விஷயத்தையும் உங்களுக்கு சொல்ல விரும்புகிறேன் கப்லான் மற்றும் இரண்டு மனோதத்துவ நிபுணர்களின் ஆய்வுகள் மூலம் மன கோளாறு – இங்க சொல்லபப்டும் உண்மைகளை கவனமா கேளுங்க இது பவுலுக்கு பொருந்துமான்னு பாருங்க – ஐந்துல ஒரு பெண்ணுக்கு இது ஏற்பட வாய்ப்பு இருக்கு. இது பெரும்பாலும் பெரியவங்களுக்கு ஏற்பட கூடியது. பொதுவாக பொருளாதாரத்தில் கீழ்மட்டத்தில் இருப்பவர்களுக்கு ஏற்படும் நிலை. குறைந்த அறிவாற்றல் உள்ளவர்களுக்கு ஏற்படும். யுத்தத்தில் இருக்கும் ராணுவத்தினருக்கு ஏற்படலாம். இதுதான் முக்கியமான ஐந்து சூழ்நிலைகள். இதுல ஒண்ணுகூட பவுலுக்கு பொருந்தாது.

அப்ப, இந்த ஐந்து பிரச்சனைகள் இருக்குன்னு சொன்னா, அதோட மன கோளாறு இருக்கு, 2 மனபிரம்மை, மேசியா காம்ப்ளக்ஸ் – இப்ப கூட்டிட்டே போகலாம், பவுல் யூத மார்கத்தில் இருந்து கிறிஸ்தவத்திற்கு வருவதற்கு இந்த மாதிரியான எந்த சம்பவங்களும் நடந்ததற்கான ஆதாரம் அவனிடத்தில் காணபபடவில்லை. இது ஒரு கொடுமையான விஷயம் என்றுதான் எனக்கு தோணுது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** வருத்தத்தினால் உண்டான மனபிரம்மை. இதை பற்றி என்ன சொல்றீங்க?

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, ஓகே, மனவருத்ததினால் உண்டான பிரம்மைகள், ஜாக் கெண்டை பொறுத்தவரை, இது சீஷர்களுக்கும் யாக்கோபுக்கும் பொருந்தும். அதுமட்டுமில்லை, இது இலக்கியங்களில் சொல்லப்பட்டு இருப்பதாக நினைக்கிறார். DSM 4ல இந்த மாதிரி துக்கத்தினால் உண்டாகும் மனபிரம்மை என்று ஒன்றுமில்லை. ஒன்றுமே இல்லை.

டோனி சொன்னது சரிதான். மன பிரம்மை ஏற்படுவது வாஸ்தவம்தான், ஆனா இந்த M.O னா என்ன? துக்கத்தினால் உண்டாகும் மன பிரமையினால் பார்க்கும் விஷயங்கள். உதாரணமா, வயசான ஒரு அம்மா தனது கணவனை இழந்துட்டாங்கனு வச்சுக்குவோம். அவங்க இப்ப ராத்திரில தனித்தா இருப்பாங்க நா என்னோட சபையில் நடந்த காரியத்தை நினைவுகூறுகிறேன், அவங்க வந்து கேட்பாங்க, “அப்பா எங்க? அப்பா எங்க? வீட்டையே சுத்தி சுத்தி வந்து எங்க இருக்கீங்கன்னு கூப்பிட்டுட்டே இருப்பாங்க, அவங்கள உதாரணமா, எடுத்துக்கலாம், துக்கத்தினால் உண்டான பிரம்மை.

ஆனா இங்க ஒரு கூட்ட மக்கள் இயேசுவை பார்க்கிறார்கள். 1 கொரிந்தியர் 15ல் ஒரு கூட்டம் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. அவங்க எல்லாரும் திகிலா இருந்தாங்கன்றது உண்மைதான். பிரம்மைகள் பயத்தினால் உண்டாகிற விஷயமல்ல. பிரம்மை என்பது ஒரு காரியத்தை நீங்க உறுதியா நம்பும்போது அது இருப்பதை போல நீங்க கற்பனை செய்து பார்ப்பதாகும். பவுலை பொறுத்தவரையில் கூட, இந்த பலதரப்பட்ட மக்கள் இருக்காங்க, நபர்கள், இடங்கள். இதுல பெண்கள் இருக்காங்க, ஆண்கள். வெளியிடங்கள், வீட்டுக்குள், நடக்கும்போது, உட்கார்ந்திருக்கையில், நிற்கும்போது. இப்பை சொல்லீட்டே போகலாம். அதோட காலியான கல்லறையும் இருக்கு.

அதோட, இந்த பிரம்மைகளை பற்றி ஆய்வு செய்த என்னோட நண்பர் ஒருத்தர் இருக்காரு. இதுல எந்தவிதமான... பொதுவான வரைமுறைகள் கிடையாது, இது எந்த விதமான மாற்றத்தை உண்டாக்குவது கிடையாதாம். இந்த பிரச்சனை இருப்பவங்க தங்களுக்கு தாங்களே பேசிக்குவாங்க. ஒருத்தர் கேட்கலாம், இங்க, பாருங்க, உங்க கணவரை உங்களால பார்க்க முடியாதுதான.” அதுக்கு அவங்க, “ஆ, ஆமா, ஆமா, சரியா சொன்னீங்கனு சொல்வாங்க.” தங்களுக்கு தாங்களே பேசிக்குவாங்க.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** உங்க கருத்து என்ன, டோனி?

**Dr. ஆண்டனி பிழு** சரி, ஒரு குறிப்பிட்ட மன ரீதியான மாற்றம் , இதுல நா தேர்ச்சி பெற விரும்பவில்லை அதை முயற்சிக்கவும் இல்ல. பவுல் சோர்வடைவதற்கு பல காரணங்கள் அங்க இருக்கலாம். சொல்லபோனா, அவன் கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்துகிறவனாக இருந்தான் இந்த மாதிரியான காரியங்களில் சில வேலை ஜனங்கள் மனமார வாய்ப்பு இருக்குது.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** கிறிஸ்தவர்களை கொள்ளும்படி சிறைபிடிக்கும்படி தமஸ்கு வழியா போகிறவன் எப்படி திடீருன்னு மாற தீர்மானித்தான் என்று எடுத்துகொள்ள முடியும் பவுலினுடைய எழுத்துக்களின் மாரும்படியான எண்ணம் இருந்ததாக அவன் எங்கயுமே சொல்லலையே? அந்த கூட்டத்தில் இவன் எதுலையுமே பொருந்த மாட்டான். ஆனா பெரிய பிரச்சனை என்னன்னா ஒரே சமயத்தில் அவனுக்கு நான்கு பிரச்சனைகள் ஏற்பட்டதுதான்: மன கோளாறு, கேட்கும் பிரம்மை, பார்க்கும் பிரம்மை, மேசியா

காம்ப்ளக்ஸ் ஏன்னா அவன் சொல்றான், "தேவன் என்னோடு பேசினார் இந்த உலகத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு செய்தியை வைத்திருக்கிறேன் என்கிறான்." இந்த நாலுதான். என்னோடு கருத்து என்னன்னா, இந்த காரியங்கள் எதுவும் DSM ல் உள்ள மன கோளாறுடன் பொருந்துவது கிடையாது. அப்ப ஒரே நேரத்தில் நான்கு விதமான பிரச்சனைகள் ஒரு நபரை பாதிக்கும் என்று சொன்னால் அது எந்தவித காரணங்களும் இல்லாம நடக்குன்றது சாத்தியமில்லை அப்படி எதையுமே அவருடைய நிருபங்களில் பார்க்கவும் இல்லை.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** சரி. அறிக்கைகளில் இருந்து எதன் அடிப்படையில் கென்ட் இந்த அறிக்கையை கொடுத்திருக்கிறார், எந்த ஆதாரங்களில் இருந்து இதை பெற்றுகொண்டிருக்கிறார்? ஏன்னென்றால் அப்போஸ்தலனாகிய பவுலிடம் இதை நாம் காணவில்லை. இது யூகங்களுக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கிறதே?

**Dr. ஆண்டனி பிழு** ஆமா, அது, அப்படிதான் இருந்தது. கிறிஸ்தவம் அல்லாத உபகரணங்கள் மூலமா இருக்கிற ஆதாரங்கள் ரொம்ப குறைவாதான் இருக்கு, என்ன நடந்தது என்று துல்லியமா உறுதியாக சொல்ல முடியும் என்ற எதிர்ப்புடன் இருந்தா அது நிச்சயம் நடக்காது. நம்மிடம் இருக்கிற பட்டியல் முழுதும், அதாவது, இதுதான் நம்மிடம் இருக்கிற ஆதாரங்களாக இருக்கிறது. ஆனா இது பெரும்பாலானவைகளை குறித்த அறியாமையை தன்னிடம் கொண்டிருப்பதுதான் பின்னடைவாக காணப்படுகிறது. என்னை பொறுத்தவரை ஒரு காரியத்தை வலியுறுத்தி சொல்ல முடியுன்னு நினைக்கிறேன் அதாவது இந்த ஆதாரங்களை வியாக்கியானிக்கும் வித்தத்தில் மாம்ச சரீரம் காணப்பட்டது அது எல்லாரும் பார்க்கும்படியான ஒன்றாக இருந்தது என்றெல்லாம் சொல்வதை தவிர்க்கலாம் ஒருவேளை கேமராக்கள் இருந்திருந்தா அதை படம் படித்து காட்டியிருக்க முடியும்.

**Dr. ஜான் அன்கொர்பெர்க்:** ஆல்ரைட், அதைதான் இப்ப பார்க்க போகிறோம், ஆனா கேரி, நீங்க எங்க இருக்கிறோம் என்பதை சுருக்கமா சொல்லுங்க, இந்த நிகழ்ச்சியில் எதுவரை வந்திருக்கிறோம். இப்ப நா என்ன செய்ய விரும்புகிறேன் என்றால் இந்த காரியத்தோடு நிறைவு செய்திடலாம். டோனி என்ன சொல்லிக்கொண்டு இருக்கிறார் மேலும் மற்ற ஆதிகால வரலாற்றாளர்கள் கொடுத்த தகவல் என்ன. அதை பற்றி சொல்லுங்க? பல டன் கணக்கான ஆதாரங்களை கொண்டிருக்கும் அந்த 12 உண்மைகளில் இருந்து நான்கினை மட்டும் திறவுகோல் ஆதாரங்களாக நீங்கள் உங்கள் புத்தகத்தில் எழுதியிருக்கிறீர்கள்: நாற்பத்தி நாலு முதல் நாற்பத்தி ஒன்பது வித்தியாசமான ஆவணங்களில் மூலம் 129 வித்தியாசமான கருத்துகள் இருக்கிறது. அதை பற்றி நாம் பார்க்க வேண்டும். ஆனால் இப்போது எதை பார்த்துகொண்டு வருகிறோம் என்பதை சுருக்கமாக சொல்லுங்கள்.

**Dr. கேரி ஹேபர்மாஸ்** சரி, இப்ப நமக்கு முன்னால இருக்கிறது என்னன்னா டோனி ஜாக் கெண்டோட கருத்துதான் சீஷர்களும் யாக்கோபும் மனபிரம்மையில் இருந்தார்கள், துக்கத்தினால் உண்டான பிரமை. பவுலுக்கு மன கோளாறு இருந்தது. இந்த காரியங்கள் எல்லாம் உண்மைக்கு புறம்பாக இருப்பது புரிகிறது. டோனி சொல்வது சரிதான். இங்க நிறைய விஷயங்கள் நமக்கு தெரியாதுதான், ஆனா பிரச்சனை என்னன்னா, நமக்கு

தெரிந்த விஷயங்கள் கூட இந்த உண்மைகளுக்கு முற்றிலும் மாற்றுகருத்துடையதாக இருக்கிறது. அதாவது எல்லாமே அப்படிதா இருக்கு: மனரீதியா, மனோதத்துவம், வரலாறு. நீங்க சொல்றது சரிதான், நா சொல்ற இந்த நான்கு திறவுகோல் ஆதாரங்களை பற்றி அபாரம் சொல்றேன், இப்ப நாம உயிர்த்தெழுதலை நெருங்கியிருக்கிறோம் என நினைக்கிறேன் ஏன்னா இந்த 12 பட்டியலில் அவர்கள் பார்த்தது இயேசுவை தான் என்பதற்கான ஆதாரங்களும் உண்மைகளும் சொல்லப்பட்டு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், தொடர்ந்து எங்களோடு இணைந்திருங்கள் அடுத்த பகுதியில் நாம் ஆதிகால ஆவணங்களால் அங்கீகரிக்கப்படும் நான்கு முக்கிய வரலாற்று உண்மைகளை பார்க்க இருக்கிறோம் தவறாமல் நிகழ்ச்சியை பாருங்கள்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண
இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.
இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org
@2015 A.T.R.I.